14th March 1966]

Sub-Registrar's Office

* 282 *Q*.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the places in North Arcot district in which offices of Sub-Registrars are proposed to be opened in 1965–66?

கனம் திரு. கோ. பூவராகன் : 1965-66-ம் ஆண்டில் துணைப் பதிவாளர் அலுவலகம் எதையும் புதிதாக ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஒன்றுமில்லை.

திரு. எஸ். முருகையன் : ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் பரிசீலனை செய்து தேவையில்லை என்று சொல்லி விடுகிறார்கள். எத்தனை கிராமங்கள் சேர்ந்திருந்தால் அல்லது எவ்வளவு ஜனத்தொகை இருந்தால் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஜனத்தொகையைப் பற்றி ஒன்றும் இல்லை. போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். போதுமான அளவு வருமானம் வருமா என்று பார்க்க வேண்டும். அந்த இடத்தில் ஒரு உணவு விடுதி இருக்க வேண்டும் போலீஸ் நிலையம் இருக்க வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் நாலைந்து நாட்களுக்கு முன்பு கூட இதே பதிலைத்தான் சொன்னார்கள். குறைந்தபட்சம் எவ்வளவு வருமானம் இருந்தால் அந்த இடத்திலே ஒரு ரிஜிஸ்ட்ரார். ஆபீஸ் ஆரம்பிக்கப்படும் என்பதற்கு நான் திருப்தி அடையும் அளவுக்குப் பதில் சொல்லுவார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஒரு இடத்தில் பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென்றால் ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் பத்திரங்களாவது பதிவாக வேண்டும். குறைந்தது பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம் ரூபாய் வரை வருமானம் வருவதாக இருக்க வேண்டும்.

Pay of Sub-Registrars

*283 *Q*.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to raise the scales of pay of Sub-Registrars of the Registration Department; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : சப்-ரிஜிஸ்ட்ரார்கள் செய்யும் வேலை அதிகப் பளுவானது. அந்த உத்தியோகம் பொதுவாக பலரைக் கவருவதில்லை. ஆகவே, அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்துவது பற்றிப் பரிசீலனை செய்யப்படுமா ?